**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 397/2022 PW . 1**

| | | | |
|---|---|---|---|
| Name : அரவிந்த் | | Fathers Name | : முனியாண்டி |
| Village: | | Taluk | : |
| Age : | | Occupation | : |
| Caste : | | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் திருச்சி ஏர்போர்ட்டில் வசித்து தனியார் வேலை பார்க்கிறேன். 07.07.2015 அன்று நானும் எனது நண்பர்கள் துரைமுருகன் மற்றம் சதீஷ் ஆகியோர் சதீஷுக்கு சொந்தமான ஹோண்டா ஷைன் இருசக்கர வாகனத்தில் திருச்சி ஏர்போர்ட்டில் இருந்து காலை 7-7.15 மணிக்கு கிளம்பினோம். மேற்படி வாகனத்தை துரைமுருகன் என்பவர் ஓட்டினார். நாங்கள் இருவரும் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்தோம். காலை 9 மணியளவில் குன்றக்குடி மெயின் சாலையில் தேவகோட்டை வழியாக நாங்கள் வந்துகொண்டிருந்தோம். அப்போது சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் வடக்கு புறமாக மாருதி ஆல்டோ கார் இயல்பான நிலையில் வந்து எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. (சாட்சி தற்சமயம் மேற்படி கார் வேகமாக வந்தது என்றும் மாற்றி கூறினார்). மேற்படி காரானது எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் நாங்கள் மூவரும் சம்பவ சாலையில் கீழே விழுந்து விட்டோம். எனக்கு இந்த விபத்தில் பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. இடுப்பு பகுதியில் கீறல் காயங்கள் ஏற்பட்டது. சதீஷ் என்பவருக்கு முகம், மற்றும் இடுப்பு பகுதியில் உள்ள எலும்பில் காயம் ஏற்பட்டது. துரைமுருகன் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயம் பட்ட நாங்கள் 3பேரும் பதட்ட நிலையில் இருந்தோம். எங்களை மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்று தெரியவில்லை. ஆனால் நாங்கள் மூவரும் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தோம். பின்னர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது துரைமுருகன் இறந்துவிட்டதாக நான் தெரிந்துகொண்டேன். மேலும் அந்த விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுநரை சம்பவ சமயத்தில் நாங்கள் மூவரும் காயம்பட்டு

பதட்டத்தில் இருந்ததால் அவரை அந்த சமயத்தில் பார்க்க முடியவில்லை. பின்னர் மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டிருந்தபோது குன்றக்குடி போலீசாரிடம் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். புகார் அதசாஆ. 1. ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

திருச்சி-ராமேஸ்வரம் சாலையில் குன்றக்குடி திரும்பும் பகுதியில் விபத்து நடந்தது என்றால் சரிதான். துரைமுருகனுக்கு அன்றைய தேதியில் தேவகோட்டை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருந்ததால் விசாரணைக்கு வந்தோம் என்றால் அவ்வாறு அவர் என்னிடம் சொல்லவில்லை. துரைமுருகன் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் சதீஷ் உடைய தந்தைக்கு சொந்தமானது என்றால் அவருடையதா அல்லது அவரது தந்தையுடையதா என்று தெரியாது. நாங்கள் மூவரும் தேவகோட்டைக்குதான் சென்றிருந்தோம் என்றால் சரிதான். திருச்சி-ராமேஸ்வரம் சாலையில் மானகிரி வழியாக தேவகோட்டைக்கு செல்வதற்காக வந்தோம் என்றால் அது தெரியாது. நான் திருச்சி-ராமேஸ்வரம் சாலையில் குன்றக்குடிக்கு திரும்பும் இடத்தில் உள்ள டிவைடரில் மோதி எங்களுக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. துரைமுருகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. துரைமுருகனுக்கு தேவகோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விபத்து வழக்கு இருந்தது என்றும் அதில் ஆஜர் ஆவதற்காக தான் நீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. துரைமுருகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் சாலை விதிகளுக்கு முரணாக 3 பேர் வந்ததால் துரைமுருகன் வாகனத்தை கட்டுபாடு இழந்து டிவைடரில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ள விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரி எங்கள் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 397/2022 PW . 2**

Name : சதீஷ்குமார்  Fathers Name : முருகானந்தம்

Village:  Taluk :

Age :  Occupation :

Caste :  Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் திருச்சி ஏர்போர்ட்டில் வசித்து பெயின்டராக வேலை பார்க்கிறேன். 07.07.2015 அன்று நானும் எனது நண்பர்கள் துரைமுருகன் மற்றும் அரவிந்த் ஆகியோர் எனக்கு சொந்தமானTN45 BD 7506 என்ற ஹோண்டா ஷைன் இருசக்கர வாகனத்தில் திருச்சி ஏர்போர்ட்டில் இருந்து காலை 7-7.15 மணிக்கு கிளம்பினோம். மேற்படி வாகனத்தை துரைமுருகன் என்பவர் ஓட்டினார். நாங்கள் இருவரும் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்தோம். காலை 9.10-9.15 மணியளவில் குன்றக்குடி மெயின் சாலையில் தேவகோட்டை வழியாக நாங்கள் வந்துகொண்டிருந்தோம். அப்போது சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் வடக்கு புறமாக மாருதி ஆல்டோ கார் வேகமாக வந்து எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. மேற்படி காரானது எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் நாங்கள் மூவரும் சம்பவ சாலையில் கீழே விழுந்து விட்டோம். அசா. 1க்கு விபத்தில் பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. இடுப்பு பகுதியில் கீறல் காயங்கள் ஏற்பட்டது. எனக்கு இடுப்பு பகுதியில் உள்ள பலத்த காயம் ஏற்பட்டு இடுப்புசப்பை கீழே இறங்கி விட்டது. துரைமுருகன் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயம் பட்ட நாங்கள் 3பேரும் பதட்ட நிலையில் இருந்தோம். எங்களைகாரை ஓட்டி வந்த நபர் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். பின்னர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது துரைமுருகன் இறந்துவிட்டதாக நான் தெரிந்துகொண்டேன். மேலும் அந்த விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுநரை சம்பவ சமயத்தில் நாங்கள் மூவரும் காயம்பட்டு பதட்டத்தில் இருந்ததால் அவரை அந்த சமயத்தில் பார்க்க முடியவில்லை. பின்னர்

மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டிருந்தபோது குன்றக்குடி போலீசாரிடம் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு அசா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

திருச்சி-ராமேஸ்வரம் சாலையில் குன்றக்குடி திரும்பும் பகுதியில் விபத்து நடந்தது என்றால் சரிதான். துரைமுருகனுக்கு அன்றைய தேதியில் தேவகோட்டை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருந்ததால் விசாரணைக்கு வந்தோம் என்றால் அவ்வாறு அவர் என்னிடம் சொல்லவில்லை. துரைமுருகன் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் எனது தந்தைக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. என்னுடையது. நாங்கள் மூவரும் தேவகோட்டைக்குதான் சென்றிருந்தோம் என்றால் சரிதான். திருச்சி-ராமேஸ்வரம் சாலையில் மானகிரி வழியாக தேவகோட்டைக்கு செல்வதற்காக வந்தோம் என்றால் அது தெரியாது. நான் திருச்சி-ராமேஸ்வரம் சாலையில் குன்றக்குடிக்கு திரும்பும் இடத்தில் உள்ள டிவைடரில் மோதி எங்களுக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. துரைமுருகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. துரைமுருகனுக்கு தேவகோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விபத்து வழக்கு இருந்தது என்றும் அதில் ஆஜர் ஆவதற்காக தான் நீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருந்தோம் என்றால் சரிதான். துரைமுருகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் சாலை விதிகளுக்கு முரணாக 3 பேர் வந்ததால் துரைமுருகன் வாகனத்தை கட்டுபாடு இழந்து டிவைடரில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ள விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரி எங்கள் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.